முருகப்பெருமான் துணை

**மகான் கொங்கணேஸ்வரர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. தவபலமாக வந்த சக்தியை
தரணியை காக்கும் வண்ணமாக
அவதாரம் நிகழ்த்தி அருளுகின்ற
ஆறுமுக அரங்கமகா ஞானியே
2. ஞானியே உன்பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது துலை திங்கள்
இனிமைதரும் முன்னான்கோர் திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 13 ம் நாள் 30.10.2022, ஞாயிற்றுக்கிழமை)
இயம்பிடுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை கொங்கணேஸ்வரர் யானும்
அரங்கஞானி கேட்க அருள்வேன்
வாசி வசம் அழியாமை திடம்
வரமாக அனைத்தும் கிட்ட
4. கிட்டவே அரங்கன் வழங்கும்
குருமார்க்கமாம் சன்மார்க்கமதை
தட்டாமல் ஏற்று வணங்கி
தவராஜனின் கரம்பட தீட்சை
5. தீட்சை அடைந்து அதன் வழி
தீவினை அகல பூசைகள்
தீட்சை வழியே ஞானபலமாக
தொடர்ந்து செய்து வந்து
6. வந்துமே ஜீவத் தயவெனும்
வள்ளல் வழிமுறை தனை
எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி
இணைந்து அன்னதான சேவை
7. சேவைதனில் பொருளுதவி பட
சேவகமும் ஆற்றி வருகவே
அவரவர் கருமவினை விலகி
ஆத்மா தூய்மை நிலை கண்டு
8. கண்டுமே பந்த பாசம் வழி
கட்டுறும் பற்றை விலகி
தொண்டு வழி சமநிலை தேடி
தேசிகன் அவதார அம்சம் விளங்கி
9. விளங்கி ஏகாந்த வடிவான
வேலவனை அரங்கமகானுள்
கலங்கமற கண்டுத் தேறி
கருணை எனும் உயர் வழியை

10. வழிதனை அகலாத் தொடர்ந்து
வையகம் எங்கிலும் அடைந்த வழி
வழிகள்தனை பறை சாற்றி
வருவோர்க்கும் வழிகாட்டும் வண்ணம்

11. வண்ணமுடன் ஞானிகளாகவே
வாழ்ந்து மற்றவர்க்கும் ஞான
எண்ணம் வழங்கித் தேற்றி
எல்லாமே அரங்கர் மயமாக்கும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–